டேவிட் டியோகோ டி விக்டோரியா, 29 — மே 7, வாரம் 6

மொசம்பிக்



# வாழ்வதற்காகச் சாகிறேன்

**சாக விரும்பினேன். அதாவது என்னுடைய பழைய வாழ்க்கைக்கு மரித்து, இயேசுவுக்குள் மீண்டும் பிறக்க விரும்பினேன்.**

நான் வாலிபனாக இருந்த போது, அங்கோலாவில் ஒரு கும்பலில் சேர்ந்தேன். அவர்கள் மரிஜுவானாவும் வேறு போதைப் பொருட்களும் விற்பவர்கள். கும்பலில் 13 பேர் இருந்தோம்; நான் போதைப் பொருட்களை வாங்கி வருவேன்; மற்றவர்கள் விற்பார்கள். நான் போதைப் பொருட்களைப் பயன்படுத்த மாட்டேன். அதனால் மற்றவர்களைவிட என்னை நான் நல்லவனாக நினைத்துக் கொண்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள். அதனால் கும்பல் தலைவன் என்னை எச்சரித்தான்.

“நீ எங்களோடு சேர்ந்து கஞ்சா புகைக்காவிட்டால், உன்னை அடிக்கப்போகிறோம்” என்று சொன்னான்.

நான் என்ன செய்யமுடியும்? அதனால் புகைத்தேன்.

கஞ்சா புகைக்க ஆரம்பித்த பிறகு, என் வாழ்க்கையில் பல குற்றங்களைச் செய்ய ஆரம்பித்தேன். அதன்பிறகு விற்பதற்காக போதைப் பொருட்கள் வாங்குவதை நிறுத்தினேன். அந்தக் கும்பலுடன் சேர்ந்து கார் திருடவும், கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தேன்.

அங்கோலாவின் தலைநகருக்கு வெளியே, எங்களைப் பார்த்தாலே எல்லாரும் பயப்படும் அளவிற்கு நடந்துகொண்டோம். அதனால் காவலர்களின் கெடுபிடி அதிகரித்தது. கொஞ்ச நாட்களிலேயே, எங்கள் கும்பலில் 12 பேரைக் கொன்றுவிட்டார்கள். எப்படியோ நான் தப்பித்துக்கொண்டேன். நான் அடங்கவில்லை. நானும் என் நண்பன் ஒருவனும் சேர்ந்து புதிதாக ஒரு கும்

பலை ஆரம்பித்தோம். அதற்கு நான் தான்தலைவன்.போதைப்பொருட் களுக்கு அடிமைப்பட்டு, பல குற் றச்செயல்களில் ஈடுபட்டு வந்தேன்.

என் வாழ்க்கை எனக்கு பெரு மையாக இல்லை. காவலர்கள் 180 பேரைக் கொன்றுவிட்டார்கள். என்னை 40 தடவைகளுக்குமேல் கைதுசெய்தார்கள்; அதில், மூன்று முறை நீதிமன்றம் என்னைக் குற்ற வாளியாகத் தீர்த்தது.

மூன்றாவது முறை சிறைச்சா லையில் இருந்தபோது, முதன்முறை யாக செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபைபற்றிக் கேள்விப்பட்டேன். திருச்சபை அங்கத்தினர் ஒருவர் வழக்கமாக என்னைச் சந்தித்து, வேதபாடங்களைக் கற்றுக்கொடுத் தார்.

ஆனாலும் நான் விடுதலை யான பிறகு, என்னுடைய அத்தை ஒருவருடைய வீட்டிற்குச் சென்று, மீண்டும் புதிதாக ஒரு கும்பலை உருவாக்கினேன். ஒரு எரிபொருள் நிலையத்தில் கொள்ளையடித்த போது, பாதுகாவர் ஒருவர் கொல் லப்பட்டார். நான் என் அத்தை வீட்டில் இருப்பதை அறிந்த காவ லர்கள், என்னைக் கொல்லுவதற் காக அங்கு வந்தார்கள்.

ஆனாலும் அந்த முறையும் நான் தப்பித்துவிட்டேன். காவலர் கள் வந்த சமயத்தில் நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அவர்கள் எல் லாப் பக்கமும் என்னைத் தேடியும், என்னைக் கண்டுபிடிக்கவில்லை. என் அத்தை பயந்துவிட்டார். என் னிடம் உடனே, கிளம்பும்படி சொன் னார். அதனால் என்னுடைய அம்மா தங்கியிருந்த வீட்டின் கீழ்தளத்தில் குடியிருந்தேன். ஆனால் நான் அங் கிருந்து கொள்ளை கும்பல் வேலை யில் ஈடுபடுவதை என் அம்மா விரும்பவில்லை. அதனால் ஒரு சூனியக்காரியிடம் உதவிகேட்டுச் சென்றார்.

அந்தச் சூனியக்காரியின் மந் திரம் வேலைசெய்ததுபோலத் தெரிந் தது. நான்கு மாதங்கள் போதைப் பொருள் பயன்படுத்தவில்லை; குற் றங்களும் செய்யவில்லை. என் அம் மாவும், என் குடும்ப அங்கத்தினர் களும் சந்தோஷமாக இருந்தார்கள். ஆனால் ஐந்தாவது மாதத்தில், முன் பைவிட அதிக தீவிரமாக குற்றச் செயலில் ஈடுபடத் தொடங்கினேன். நம்பிக்கையே இல்லாத நிலைக்குச் சென்றேன்.

பிறகு ஒருவரைச் சந்தித்தேன். அவரை எல்லாரும் பிம்ப் என்று அழைப்பார்கள். அவர் தன் உடல் முழுவதிலும் பச்சை குத்திருப்பார். அவருடைய பெயரையும் தோற் றத்தையும் பார்த்தால், என்னைப் போல் கொள்ளை கும்பலைச் சேர்ந் தவர் என்றுதான் எல்லாரும் நினைப் பார்கள். ஆனால் அவர் ஒரு செ வந்த்-டே அட்வென்டிஸ்ட். ஒரு நாள் பிம், ரோமர் 8:14 வசனத்தை எனக்கு வாசித்துக் காண்பித்தார்: 'எவர்கள் தேவனுடைய ஆவியி னாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரரா யிருக்கிறார்கள்'.

அந்த வார்த்தைகளைக் கேட் டதும், தேவனுடைய மகனாக இருக்க வேண்டும் என்கிற ஓர் ஆசை என் உள்ளத்திற்குள் எழும்பியது. 'எனக்

குக்கூட தேவன் ஏதாவது திட்டம் வைத்திருக்க முடியுமா?' என்று யோசித்தேன்.

பிம்ப்புடன் சேர்ந்து வேதாகமத்தைப் படித்தேன். தேவனைப் பற்றி அறிந்தேன். தேவன் என்னையும்கூட நேசிக்கிறார் என்பது புரிந்தது. இயேசு எனக்காக மரித்ததையும் அறிந்தேன். 'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'. யோவான் 3:16.

என் வாழ்க்கை மாறத்தொடங்கியது. சாக விரும்பினேன். அதாவது என்னுடைய பழைய வாழ்க்கைக்கு மரித்து, இயேசுவுக்குள் மீண்டும் பிறக்க விரும்பினேன். இயேசுவுக்கு என் இருதயத்தை ஒப்புக்கொடுத்து, 2013ஆம் ஆண்டில், செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச் சபையில் சேர்ந்தேன்.

தேவனுக்கு ஸ்தோத்திரம்! இன்று நான் மொசம்பிக் அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் போதகர் படிப்பைப் படித்து வருகிறேன்.

இயேசுவை நான் பின்பற்றத் தீர்மானித்தபோது என் குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் என்னைத் திட்டினார்கள். ஆனால் நான் கவலைப்படவில்லை. மீதியுள்ள நாட்கள் முழுவதும் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்திருக்கிறேன். என் இருதயம் அவருக்கு சொந்தம்; என் குடும்பத்தினர்கள் உட்பட இன்னும் அநேகரை நான் அவரிடம் வழிநடத்துவதற்கு அவர் என்னைப் பயன்படுத்தவேண்டும்.

மூன்று வருடங்களுக்குமுன் எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதியானது மொசம்பிக் அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் புதிதாக வகுப்பறைகள் கட்டுவதற்கும், சாதனங்கள் வாங்குவதற்கும் பயன்பட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தில்தான் டேவிட் படித்து வருகிறார். டேவிட்டின் சொந்த நாடான அங்கோலாவில் நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கை பயன்படப்போகிறது. அதில் லுவாண்டாவில் உள்ள செவந்த்-டே அட்வென்டிஸ்ட் பள்ளியும் ஒன்று. அந்தப் பள்ளிக்கு அருகாமையில்தான் டேவிட்டின் வீடும் இருக்கிறது. நீங்கள் தாராளமாகக் கொடுங்கள்.

**டேவிட் டியோகோ டி விக்டோரியா**

## கதைக் குறிப்புகள்

- யாராவது ஒருவர் இந்தச் சம்பவத்தை தன் சொந்த அனுபவம்போலச் சொல்லட்டும்.
- முகநூலிலிருந்து படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: ***bit.ly/sid-2022.***